பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 01 ஞாயிற்றுக்கிழமை (17-9-2000) தொ. பேசி; 3378 ஒலி: 272

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
வரலாறும்
சமூகக்கல்வியும்
பகுதி I

## தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற போது

# வான்பரப்பில் ஹெலி தீப்பற்றியது

# அமைச்சர் அஷ்ரப் உடன் 15 பேர் பலி!

### கருகிய நிலையில் சடலங்கள் மீட்பு

(கொழும்பு விசேட நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், துறைமுகங்கள், அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் பயணம் செய்த எம். ஐ. 24 ரக ஹெலிகொப்டர் கேகாலை அரநாயக்கா எனும் இடத்தில் விபத்திற்குள்ளாகித் தீப்பற்றிஎரிந்ததனால் அமைச்சரும் அவருடன் பயணம் செய்த 14பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 9.20 மணிக்கு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சருடன் தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடும் சின்னத்தம்பி, கதிர்காமத்தம்பி அமைச்சரின் மூன்று மெய்ப் பாதுகாவலர்கள், இரண்டு விமானிகள் உட்பட ஐந்து விமானப் படையினரும் கொல்லப்பட்டவர்களுள் அடங்குவர்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில்கலந்து கொள்வதற்காக நேற்றுக்காலை பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் இருந்து கல்முனை நோககிப் புறப்பட்ட எம். ஐ 24 ரக ஹெலிகொப்டரில் அமைச்சருடன் அம்பாறை மாவட்ட வேட்பாளர்கதிர்காமத்தம்பி, விமானச் சிப்பந்திகள், மெய்ப் பாதுகாவலர் ஆகியோர் உட்பட 15 பேர் பயணம் செய்தனர்:

காலை சுமார் 9.20 மணியளவில் வான்பரப்பில்சென்று கொண்டிருந்த வேளை ஹெலிகொப்டருடனான கொழும்பு தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டதுடன் ஹெலிகொப்டர்வான் பரப்பில் தீப்பிடித்துக்கொண்டதையடுத்தே இவ் விபத்து நிகழ்ந்துள்ளது. கேகாலை மாவட்டத்தில் அரநாயக்கா

(8ஆம் பக்கம் பார்க்க)

### விபத்து நடந்தஇடத்தை பார்வையிட்டனர்

அமைச்சர் அஷ்ரப் பயணம்செய்த ஹெலி விபத்துக்குள்ளான இடமான அரநாயக்கா பகுதிக்கு போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலான பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம் ஹிஸ்புல்லா, ரகு ஹக்கீம், ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (வ)

### ஜனாதிபதி நேரில் சென்று அனுதாபம்

(கொழும்பு)

அமைச்சர் அஷ்ரபின் மறைவு குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தில் அமைச்சர் அஷ்ரப் கொல்லப்பட்ட சம்பவத்தை அறிந்தவுடன் ஜனாதிபதி அவரது இல்லத்திற்குச்

### மட்டக்களப்பில் சோகமயம்

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்

### இனந்தெரியாதோரின் தாக்குதலில் ரணில் மயிரிழையில் உயிர்தப்பினார்

ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு திரும்பிய கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மீது இனந்தெரியாதோர் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது அவர் காயம் எதுவுமின்றி மயிரிழையில் உயிர் தப்பினார். அவருடன் சென்ற கட்சியின் ஆதரவாளர்கள் காயமடைந்த நிலையில் குருநாகல் (8ம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி சரித்திரம் படைத்த தலைவர் அஷ்ரப்

#### ஹிஸ்புல்லா இரங்கல்

(மட்டக்களப்பு)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தை உருவாக்கி இன மத பேதமற்ற சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று அயராது உழைத்த தலைவர் எம்.எச்.எம அஷ்ரப்பின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம்களின் உரிமைக்காக தனிக்கட்சி ஆரம்பித்தவர்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணி அவர்களுக்குத் தனிக்கட்சி தேவை என உணர்ந்து கட்சி ஒன்றை ஆரம்பித்தவர். அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரப் அவரது மறைவு முஸ்லிம் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பௌசி இருக்குமிடத்தில்

அமைச்சர் அஷ்ரப்பின் மறைவு குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அஷ்ரப்பின் இல்லம் சென்று தனது அனுதாபங்களை அவரது மனைவியான மர்ஹூன் அஷ்ரப்பிடம் நேரில் தெரிவித்துக் கொண்டார்.

உலங்கு வானூர்தி விபத்

கொல்லப்பட்ட சம்பவத்தை அறிந்தவுடன் ஜனாதிபதி அவரது இல்லத்திற்குச் சென்று தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டதுடன் அங்கு 30 நிமிடங்கள் தங்கியிருந்து தனது கவலையை வெளியிட்

[8ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தலைவர்கள் அஷ்ரப்பின் மறைவிற்கு அஞ்சலி

(கொழும்பு)

உலங்குவானூர்தி விபத்தில் நேற்றுக்காலை கொல்லப்பட்ட அமைச்சர் அஷ்ரப்பின் மறைவு குறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் அதிர்ச்சியும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுத் தூதுவர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் அமைச்சர் அஷ்ரப்பின் இல்லம் சென்று அஞ்சலி செலுத்தி தங்கள் கவலைகளை வெளியிட்டனர்.

(வ)

# அரசியலில் ஒன்றாக இருந்தோம் அஷ்ரப்பின் மறைவுக்கு ரணில் அஞ்சலி

அமைச்சர் அஷ்ரப் ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்ட சம்பவத்தை அறிந்து தான் அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது கவலையை அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளார்: அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: அரசியலில் நாம் ஒன்றாகக் கடமைகளைச் செய்துள்ளோம்: அவர் தனது இறுதி நேரத்தில் அரசில் இருந்து விலகி கிழக்கு மாகாணம்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரப்பின் அகால மரணச் செய்தி மட்டக்களப்பு மாவட்டத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

காத்தான் குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், ஓட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்சமூகத்திற்கு பேரிழப்பு

(வவுனியா)

நாட்டின் சகல சமூகங்களிடையேயும் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும் என இரவு பகலாகப்பாடுபட்ட சமாதானத்தின் இலட்சியத் தலைவர்; அமைச்சர்

[8ஆம் பக்கம் பார்க்க]

## அஷ்ரப்பின் வாழ்க்கைப்பாதை

உலங்கு வானூர்தி விபத்தில் நேற்றுக்காலை கொல்லப்பட்ட அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் வாழ்க்கைக் குறிப்பு;

★ 1948-ம் ஆண்டில் கல்முனையில் பிறந்தார்.
★ ஆரம்பக்கல்வியை கல்முனை ஸ்ரீ ஆனந்த வித்தியாலயத்திலும், கல்முனை வெஸ்லிக் கல்லூரியிலும் கற்றார்
★ 1970ம் ஆண்டு சட்டக்

(8ம் பக்கம் பார்க்க)

என உணர்ந்து கட்சி ஒன்றை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பௌசி இருக்குமிடத்தில் நான் அமைச்சராக மாட்டேன்

## மரணத்திற்கு முன் அஷ்ரப்கூறினார்

(கொழும்பு)

அமைச்சர் பௌசி இருக்கும் அமைச்சரவையில் தான் ஒரு போதும் அமைச்சராக இருக்கப் போவதில்லை. அதனால் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ளவும் மாட்டேன்.

இவ்வாறு நேற்று கால

(8ஆம்பக்கம் பார்க்க)

# மும்முனையூடாகபடையினர் முன்னேற முயற்சி?

(நமது நிருபர்)

யாழ். குடாவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை மீட்டெடுக்கும் வகையில் மூன்று முனைகளில் இருந்து இராணுவம் நேற்று முன்னேற்ற முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் இம் முன்னேற்ற முயற்சிக்கு 'மிக்' விமானம், ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பு கொடுத்ததுடன், ஆட்லறி, பல் குழல் பீரங்கிகளும் படைத்தளங்களிலிருந்து ஏவப்பட்டன.

கோப்பாய் கைதடிப்பாதையூடாக, வண்ணாத்திப் பாலம் நோக்கியும், கொழும்புத்துறை, அரியாலைப்பகுதிகளில் இருந்து, கிழக்கு அரியாலை பூம்புகார் நோக்கியும், சங்கத்தானையிலிருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வரி விளம்பரம்

### தேவை

இணுவிலில்இயங்கிக்கொண்டிருக்கும் ஆடை தைக்கும் தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர், வெட்டுபவர், தைப்பவர், பிறாதைப்பவர், பூப்போடுபவர்கள் தேவை: இடம் பெயர்ந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சகல விபரங்களுடனும் 20 - 09 - 2000 முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 110, வலம்புரி இல- 15வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம். [கி/786]

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம், கம்பனிக்கு ஐஸ்பழம், ஐஸ்கிறீம், விற்பனைக்கு சயிக்கிள், வான், வியாபாரிகள் உடன் தேவை தொடர்பு ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம் நீர்வேலி தெற்கு, கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி, T P No: 070 -212354, 070-212383, 070-212803 [1740]


## உயிரிசை ஒலிநாடா வெளியீடு

ஏழாலையூர் செந்தமிழ்க் கலாமன்ற ஆதரவில் இன்று காலை 9.30 மணியளவில், செல்வன் ரஜீபன் ஆக்கத்தில் உருவானஉயிரிசை ஒலிநாடா வெளியீட்டுவிழா நடைபெறுகிறது.

இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழா, கவிஞர் இ.முருகையன் தலைமையில் இடம் பெறுகிறது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி மத்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

கொட்டடி சனசமூக நிலையத்தின் பாலர் கல்விக் கட்டடத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் கொட்டடிப் பகுதிக் கிராம உத்தியோகத்தர் கி. மகாலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். (ந)

# தமிழ்க் கல்விக்காகதன்வாழ்வை அர்ப்பணித்த அறிவுப் பெருங்கடல் நமசிவாய தேசிகர்

இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகரின் மறைவை யொட்டி இககட்டுரை பிரசுரமாகிறது. (ஆ...ர்)

'கவிஞன் எப்பொழுதும் கவிஞனே. கவித்துவவேளை, சமயம் என்று ஒன்று அவனுக்கு இல்லை' என்ற பொருள்படப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஓர் இடத்தில் எழுதியுள்ளார்

கவிஞனுக்குப் போலவே அறிஞனுக்கும் தன் அறிவை வெளிப்படுத்தும் வேளை என்று ஒன்றில்லை, ஏனெனில் அவனுடைய அறிவுப்பரப்பு எப்பொழுதும் அமுத சுரபி போலச் சுரந்த வண்ணமே இருக்கும்.

இந்த உண்மைக்கு நடமாடும் எடுத்துக் காட்டாய் விளங்கியவர், சென்ற திங்கட் கிழமை (11-09-2000 அமரரான, இலக்கணவித்தகர் மகாவித்துவான் இராமசுவாமி நமசிவாய தேசிகர் என்று தயங்காது கூறலாம்.

தமிழ் இலக்கணத்தில் சிறப்பாகவும், இலக்கியம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றில் பொதுவாகவும் நிறைந்த அறிவுடன் எவர், எந்த வேளையில் எந்த ஐயத்தை வெளியிட்டாலும் அவர் மனங் கொள்ளுமாறும் நிறைவு பெறுமாறும்விளக்கம் அளித்த பேரறிஞர் அவர்.

### நடுவூர் பழுத்த நன்மரம்

தேசிகர்சுகவீன முற்றும்சிகிச்சைக்காக சென்னை சென்றது சுமார்இரண்டு மாதங்களுக்கு முன்பாகும். அதற்கு முன்னர் ஓரளவு உடல் நிலை தளர்ந்திருந்தபோதும், மூளைத் திறன் குன்றாதும் நினைவாற்றல் மங்காதும் தம்மிடம் வந்தோரின் அறிவுத்தாகத்தைப் போக்கிவந்தவர் அவர். இவ்வகையில் 'நடுவூர்ப் பழுத்த நன்மரம்' என்றே அவரைக் கொள்ளலாம்.

மகாவித்துவான் சி. கணேசையரின் அரவணைப்பில் தமிழிலக்கணத்தை முறையாகக் கற்று அவரின் தலை மாணாக்கராய் விளங்கிய இலக்கண வித்தகரின் மாணாக்கபரம்பரைமிக நீண்டது. பண்டிதர் ச. பொன்னுத்துரை, இலக்கிய கலாநிதி மு. கந்தையா, க. உமா மகேஸ்வரன், பயிலங் கூட

## மறைந்தார் மாண்பு

லூர் பி. நடராசன் க. சோமசுந்தரம் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்) தொடக்கம் கம்பவாரிதி இ. ஜெயராஜ், ரகுபரன், செல்வன் பிரசாந்தன் (பேராதனைப் பல்கலைக்கழகக் கலைமாணி (தமிழ் சிறப்பு) மாணவன் வரை மூன்று பரம்பரைகளின் அறிவுக்கண்களைத் திறந்துவைத்த பெருமை அவருக்கு உண்டு. கற்றதனால் பெற்ற அறிவினைக் கற்பித்தல் மூலம் தீட்டிக் கடைசிவரை பேரறிஞராகவே அவர் விளங்கினார் மலைபோல் அளத்தற்கருமையராயினும் மலர்போல முகமலர்ந்து, கடினமான இலக்கண இலக்கிய பாடங்களைக் கருப்பம் சாறுபோலப்பிழிந்து சுவைபடக் கற்பித்து நல்லாசிரியருக்கு இலக்கணமாய் விளங்கிய அவர் மாணவரின் உள்ளங்களிலே சிரஞ்சீவியாய் வாழ்வார் என்பதற்கு ஐயம் இல்லை.

பிராசீன பாடசாலை, காவிய பாடசாலை என்பன மரபுவழுத்தமிழ்,வடமொழிக் கற்பித்தல்களால் உருவாக்கிய பண்டித பரம்பரையும் மிக நீண்டதாகும். ஆரம்பக் கல்வியைப் பாடசாலைகளிலே பெற்றபின் மரபுசார்கல்வியை மேற்குறித்த பாடசாலைகளூடாகப் பெற்றவர்களிலே மகாவித்துவான் சி. கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள. நாவலர் காலத்திலேயே தமிழிலும் கூடிய முக்கியத்துவத்தை ஆங்கிலம் பெற்று, பிரித்தானிய ஆட்சி இறுதி

## சொக்கன்

வரை அந்நிலை தொடர்ந்தது அக்காலத்தில் பொருளாதார வசதி படைத்தோர் ஆங்கில மொழியூடாகக் கல்லூரிகளுக்குத் தம மக்களை அனுப்பி அவர்களைச் சமூக அந்தஸ்திலும் உயர்த்திவைத்தனர். பொருளாதார வசதி குன்றியோர் தமிழ்ப் பாடசாலைகளிலே கற்று சிரேஷ்டதராதரப்பத்திரம் அல்லது பிறலிம் என்ற உயர் பரீட்சையிலே தேறி தொடர்ந்து ஆசிரியப் பயிற்சியும் பெற்றுச் சிறிய பாடசாலைகளிலே ஆசிரியர்கள் ஆயினர்.

இவ் வாறானவர்களிற் சிலர் (பண்டிதமணி சி.க; உட்பட) மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் என்பன நடத்திய பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றித் தேறிப் பண்டிதகளாய்த் தமிழறிஞர்களாய் மேலோங்கினார். ஆனால்பண்டிகர்களாகவே வாழ்நாள் முழுவதும் விளங்கவாய்ப்பிருக்கவில்லை. 6 ஆம் வகுப்புத் தொடக்கம் 10 ஆம் வகுப்புவரை தமிழ் கற்பித்தஇவர்கள்தொடர்ந்து தமது அறிவைத் தீட்டிக் கொள்ளவாய்ப்புப் பெறாமை துரதிர்ஷ்டமே.

### அறிவை தீட்டினார்

ஆனால் இலக்கணவித்தகர் போன்றோர் பண்டித வகுப்புகளிலே கற்பித்துதம் அறிவை எக்காலத்திலும் தீட்டிக் கொண்டே இருந்தமையால் இவர்கள் தமிழ் பேரறிஞர்களாய்த் தமிழ் கூறும் நல்லுலகின் புகழுக்கும் மதிப்புக்கும் உரித்தானதில் வியப்பில்லை

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்ற வள்ளுவத்தைத் தாரகமந்திரமாகக் கொண்ட நமசிவாய தேசிகரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கணவித்தகர் பட்டமளித்தும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் மகாவித்துவான் பட்டம் வழங்கியும் கௌரவித்தமையும் வியப்பல்ல சில மாதங்களின் முன்பு இலக்கண வித்தகரின் சதாபிஷேகப் பெருவிழா, நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்திலும துர்க்கா மணிமண்டபத்திலும் மிக விமரிசையாக அவரின் மாணவராலும் ஆர்வலராலும்கொண்டாடப் பட்டது.

இந்த விழாவிலே தேசிகரின் கட்டுரைகள்கவிதைகள் அடங்கிய நூரலும், சதாபிஷேகச் சிறப்பு மலரும் வெளியாயின

நல்லாசிரியராய் விளங்கி தலை சிறந்த தமிழ் வல்லார் பலரையும் உருவாக்கிய தேசிகர், தமது அறிவாற்றல்களைத் திரட்டி எதிர் காலச் சந்ததியினருக்கு நூல்களாய் வழங்காமைபெருமகுறையே.

அந்தக் குறை மேற்குறித்த தொகுப்பு நூலால் ஓரளவு நிவர்த்தியாயிற்று எனக்கு நான் கற்றவற்றில் சில ஐயங்கள் இன்னும் உள்ளன அவை தெளிவடையாத வரை என் பெயரால் நூல் வெளியாவது எனக்கு விருப்பம் இல்லை என்ற அவர்ன் கூற்று காலத்தோடு ஒட்டியதன்று அவரின் முடிவு எமக்கும் (அவரின் அறிவுக் கருவூலங்களைப் ஆவணவடிவில் பெற முடியாமற்போனமை) பேரிழப்பு என்றே கூறவேண்டும். (ஏ)

## இராசி பலன்

17/ 09 / 2000
(பூரட்டாதி 1,ஞாயிறு)
சதுர்த்தி பி. இ 12 15வரை
அச்சுவினி பி.ப 2 22வரை
இராகுகாலம்
-4. 33-6.03
சுபநேரம் -9.03-10. 33

**மேடம்**
காரிய அனுகூலம், தெளிவானசிந்தனை உடல்,ஆரோக்கியம்.

**இடபம்**
உஷ்ண வியாதி,பிரயாண அலைச்சல், சயனசுகக் குறைவு.

**மிதுனம்**
நினைத்த காரியம் கைகூடும்,பணவரவு, பெரியோர் மதித்தல்.

**கடகம்**
காரிய தன்மை,தொழில் அதிகாரம்,சிறுவியாதி.

**சிங்கம்**
மனம் அமைதியின்மை, தந்தைவழி உறவு,பிரயாணம்.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, உடல் வருத்தம்,துக்கம்.

**துலாம்**
சுவாரஸ்யம், விருந்துபசாரம், காரியம்வெற்றி.

**விருச்சிகம**
சத்துருஜெயம், சந்தோசமிகுதி,தொழில் விருத்தி.

**தனுசு**
புத்திரரால் கவலை, பணவரவு,காரியம் தாமதம்.

**மகரம்**
வாகனசுகம், தாய்வழி உறவு,நண்பர்கள் விரோதம்.

**கும்பம்**
பொருள் வரவுசகோதரர் உதவி, பிரயாணம்.

**மீனம்**
நித்திரையில் அமைதியின்மை,பிரயாணம், பணச் செலவு,செல்வாக்கு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


## ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]
10. 30 மணிக்கு
லிவிங்ஸ்ரன் நடித்த
"அதே மனிதன்"
மர்மச்சித்திரம்
புதிய வெளியீடு

2. 00மணிக்கு
சிவாஜி நடித்த
"நான் பெற்ற செல்வம்"


## எமது அஞ்சலி

இலக்கண வித்தகர் மூதறிஞர்
பண்டிதர் இ. நமசிவாய தேசிகர்

அவர்களின் மறைவு மரபு வழித் தமிழ் உலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் ஆக்கங்கள் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அறிமுகமாக வேண்டும்.

அமரருக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்கு வேண்டுதல் செய்கின்றோம்.


கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்
கட் நெல்.ப.நோ.கூ.சங்கம்
கரவெட்டி. (கி/796)


## நாகம்ஸ்

(சுன்னாகம்)
விஜய், சிம்ரான்
நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
(ரீல்ஸ்)
(இந்தியாவில் 200 நாட்களையும் கடந்த வெற்றிச் சித்திரம்)
தினசரி11.00-2.30(பு:ப)
(கி-793)



## இரட்டை இலை தோடம்பழ சின்னத்திற்கு வாக்களியுங்கள்.


தர்மராஜா வில்சன்

ஒரு காத்திரமான அரசியல் தலைமையை கட்டியெழுப்ப...
திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழர்தாயகத்தின் சுயாட்சிக்காக
சொந்த மண்ணில் அகதிகளாகும் அவலநிலைக்கு முடிவுகாண

சுயேச்சைக் குழு-1 X


சுரேஸ் பிரேமச்சந்திரன்

ஈ. பி. ஆர். எல். எவ். (சுரேஸ் தலைமை) முதன்மை வேட்பாளர் தர்மராஜா வில்சன் (இல. 7) (1728)

## சாவ. சுன்னாகம் லயன்ஸ் கழகங்கள் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் சுன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து அளவெட்டி மகாஜனா மண்டபத்தில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் கண் பார்வை குறைபாடுள்ள 91 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கழகத் தலைவர் லயன். கே. சற்குணதேவன், சுன்னாகம் கழகத் தலைவர் லயன்: எஸ். சச்சிதானந்தன் ஆகிய இருவரின் தலைமையில் நடத்தப்பட்ட இம்முகாமில் மொத்தமாக 150 பேர் பரிசோதிக்கப்பட்டனர்.

வைத்தியக் கலாநிதிகள் வி. யோகராசா, க.சிவராசா, எஸ். எஸ். அருளானந்தம் ஆகியோர் நீரிழிவு. இரத்த அழுத்தம் போன்ற பரிசோதனைகளை நடத்தியிருந்தனர். நீரிழிவு நோயுள்ளவர்களென 6 பேரும், விழி வெண்படலப் பிரச்சினை உள்ளவர்களென 11 பேரும் இனங்காணப்பட்டதாக சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் செயலாளர் லயன். கே. சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இம்முகாமில் கண்பரிசோதனையை எரிக்கனேஸ் ஸ்தாபனத்தினர் இலவசமாக மேற்கொண்டிருந்தனர்.

(க-77(

## ஏழை மாணவரின் கல்விவாய்ப்பிற்கு மகா பொல திட்டம் பேருதவி

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

[தென்மராட்சி]

மகாபொல புலமைப் பரிசில் திட்டம் ஏழை மாணவர்களின் உயர் கல்விக்கான வாய்ப்புக்களையும் பொருளாதார வளங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 358 மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது; இத்திட்டம் எமது மாவட்டத்தில் ஏழை மாணவர்களுக்கு மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மகா பொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தரும் முகாமைத்துவ பீடத் தலைவருமான என். நடராஜசுந்தரம் உரையாற்றுகையில் மகா பொல புலமைப் பரிசில் திட்டம் என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் சிறப்பாக நிறைவேறி வருகின்றது. குறிப்பாக இத்திட்டத்தினால் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் ஏழை மாணவர்கள் ஓரளவு பொருளாதாரக் கஷ்டமின்றி உயர் கல்வியைப் பெற அது வாய்ப்பாகவுள்ளது. சில சமயங்களில் இக்கொடுப்பனவு சிலரால் சில விடயங்களையும் ஏற்படுத்தி வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன், விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர். குமாரவடிவேல், விவசாய பீடாதிபதி ஆர். நவரட்ணராஜா உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-77)

## பெற்றோலிய கூட்டுத்தாபன யாழ். பிராந்திய நிலையத்தில் விரைவில் புதிய நியமனங்கள்

### முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்தியத்தில் மேலும் பலருக்கு விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளதாக பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; யாழ்.பிராந்தியத்தில் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களில் சுமார் 17பேர் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

எழுதுவினைஞர்கள் தட்டெழுத்தாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

புதிதாக நியமிக்கப்படுபவர்களும் ஏற்கனவே நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களே தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்: (க-03)

## யாழ்ப்பாணத்தின் யுத்த சூழல் சிறுவர்களை பாதிக்க செய்யும்

### பி.பி.சி. செய்தியாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது தோற்றம் பெற்றுள்ள யுத்த அனர்த்தத்தால் யாழ். குடாநாட்டில் சுய நிலை இழந்த சிறுவர்கள் உருவாகக் கூடிய அவல நிலை எழுந்துள்ளதாக பி.பி.சி. செய்தியாளர் அலுஸ்தலோட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்த பின்பு மேற்கண்ட தகவலை வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம். ஐ. 24 ரக உலங்கு வானூர்திகளும், யுத்த விமானங்களும் தாழ்வாகப் பதிந்து குண்டுகளை வீசுகின்றமையும், பல்குழல் எறிகணைகள் குடியிருப்புக்களுக்கருகில் வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடிக்கின்றமையுமே சிறுவர்களது இந்த பரிதாப நிலைக்கு காரணமாகும்.

யாழ்ப்பாணத்தில் இன்று நிலவும் போர்ச்சூழல், இன்றுள்ள சிறுவர்களை மட்டுமல்லாது இனிவரும் காலத்தில் உருவாகும் பிஞ்சுகளையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் எனவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (உ-த)

## ★ வடமராட்சி கல்வி வலயத்தில் நூலக முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டோர்

(மந்திகை)

வடமராட்சி வலய கல்வித்திணைக்களத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் நூலக முகாமைத்துவ உதவியாளர்கள் 17 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு—கிழக்கு மாகாண அமைச்சின் சுற்று நிருபத்தின் படி ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள கல்வி கற்கும் பாடசாலைகளிடையே இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நூலக முகாமைத்துவ உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

சி. லதாமணி தொண்டைமானாறு வீரகத்தி ம. வி, இ. நளாயினி பருத்தித்துறை வேலாயுதம் ம. வி. க. றேணுகா உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, எஸ். புரட்சிதாசன் இமையாணன் அ.த.க.பாடசாலை, ந. சிவனேஸ்வரி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, க. பாஸ்கரன் உடுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை, க. செந்தில்மதி தேவரையாளி இந்துக்கல்லூரி, இ. சாந்தினி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, வி. வானதி நெல்லியடி ம.ம.வி, க. ஜெபாபு கொற்றாவத்தை மெ.மி.த.க பாடசாலை, சி. ஜெயந்தி கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், வே. நந்தினி தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், செ. சாந்தினி வட இந்து மகளிர் கல்லூரி, கா, கமலநாதன் புற்றளை ம.வி, ச. சகுந்தலாதேவி கம்பர்மலை அ.த.க. பாடசாலை, க. பாஸ்கரன் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி து. புஸ்பமலர் ஞானாசாரியார் கல்லூரி. (ந-2-23)

## அனுதாப கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலக்கண வித்தகர் இ:நமசிவாய தேசிகரின் மறைவையொட்டிய அனுதாபக் கூட்டம், இன்று பி.ப 4: 00 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## புதியவகை ரயில் தருவிப்பு

(கொழும்பு)

ரயில் சேவையை மேம்படுத்தும் நோக்கில், பிரான்ஸ் தயாரிப்பு பவஸ்றீற் ரயில் வண்டிகள் 10 கொழும்புக்கு தருவிக்கப்பட்டுள்ளது.

எம்- 9 ரக இவ் ரயில் வண்டிகளில் ஒரே நேரத்தில் ஆயிரத்து 500 பயணிகள் பயணம் செய்யமுடியும். (உ)

## கொழும்புத்துறை, அரியாலை மக்கள் பிரதிநிதிகள்-படையினர் விரைவில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தின்போது கொழும்புத்துறை மற்றும் அரியாலைப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பு படை அதிகாரிகளுக்குமிடையே விரைவில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

மக்கள் இடம்பெயர்வின் போது விட்டுவந்த பொருட்களை மீட்பது தொடர்பாக படை அதிகாரிகளுடன் மேற்படி பிரதிநிதிகள் கலந்தாலோசிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது:

யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் பெருமளவு கண்ணிவெடிகள், மற்றும் வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதால் அப்பகுதிகளுக்கு செல்ல மக்கள் அச்சம்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்தசில தினங்களாக அரியாலை தபால்கட்டை சந்திவரை உள்ளபகுதிகளுக்கு மக்கள் சென்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும். (த-3)

## மக்கள் பாதுகாப்பு தொடர்பான வேலைப்பட்டறை 19-ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மக்கள் பாதுகாப்பு தொடர்பான வேலைப்பட்டறை எதிர்வரும் 19-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30 முதல் 4-30 வரை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அரச அதிகாரிகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், பாதிப்பிற்குள்ளான மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முன்னர் கடந்த 14-ம் திகதி இன் நிகழ்வு நடைபெறுவதாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போதிலும் பின்னர் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். (க-3)

## வலி-கிழக்கு பிரதேச சபை முன்பள்ளி ஆசிரியர்கள் விரைவில் உள்வாங்கப்படுவர்

(கோப்பாய்)

வலி-கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் ஒருபகுதியினர் விரைவில் உள்வாங்கப்படவுள்ளதாகமேற்படி சபையின் உப- தலைவர் ரவி குறிப்பிட்டார்.

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்கள் இந் நடவடிக்கையினால் பெரிதும் பயனடைவார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

பிரதேச சபை உறுப்பினர் தர்மராசா உட்பட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-79)

கல்வித்துறை சிறப்புற
தரமும் வளங்களும் மென்மேலும் அதிகரிக்க
கல்வித்துறைக்கு கடந்த காலத்தில் ஆற்றிய பணி
எதிர்காலத்திலும் தொடர எம்மை ஆதரித்திடுவீர்!

X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி
(1689)
(புளொட் + ஈரோஸ்)

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## வரலாறும் சமூகக்கல்வியும்

### மாதிரி வினாத்தாள் - 3 பகுதி - I

ஆக்கம்: இரா.கணேசானந்தன்
(யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.நெடுந்தீவு)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

[நேற்றைய தொடர்ச்சி———]

பொருத்தமானவிடையின் கீழ் கோடிடுக

★ 1 வது நிரலில் மலையக சீதாவக்கை இராச்சிய மன்னர்கள் தரப்பட்டுள்ளனர்.
2 வது நிரலில் அவர்கள் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த இடங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.
3 வது நிரலில் தோற்கடிக்கப்பட்ட ஆண்டு ஒழுங்கின்றி உள்ளன. இவ் தகவல்களின் உதவியுடன் 25,27, வினாக்களுக்கு விடை தருக.

| நிரல் 1 (மன்னன்) | நிரல் 2 (இடம்) | நிரல் 3 (ஆண்டு) |
|---|---|---|
| A) முதலாம் விமலதர்ம சூரியன் | D) கன்னொறுவ | G) கி பி 1594 |
| B) மாயாதுன்னை | E) தந்துறே | H) கி பி 1562 |
| C இரண்டாம் இராஜசிங்கன் | F) முல்லேரியா | ) கி. பி 1638 |

25) A B,C என்ற மன்னர்களின் ஒழுங்கின்படி போர்த்துக்கேயருடன் போர் நடைபெற்ற ஆண்டுகள் நிரல் 3 எவ் எழுத்துக்களால் குறிப்பிடப்படுகின்றன?
(1) IGH (2) HGI (3) GHI (4) GIH

26) 3 ஆம் நிரலில் உள்ள GHI என்ற ஆண்டுகளின் ஒழுங்கின் படி போர் நடைபெற்ற இடங்கள் நிரல் இல் குறிப்பிடுகையில் சரியான விடை எது?
(1) EFD (2) EDF (3) DEF (4) DFE

27) நிரல் 1 இல் ABC என்ற மன்னர்களின் ஒழுங்கிற்கேற்ப போர் நடைபெற்ற இடங்கள் நிரல் 2இல் இருந்து தெரிவு செய்யப்பட்டால் வரும் சரியான ஒழுங்கு எது?
(1) EDF (2) EFD (3) DEF (4) DFE

28) ஒரு நாட்டில் சார்ந்து வாழ்வோர் எனக் கருதப்படுபவர்கள் யாவர்?
(1) 15 வயதிற்குக் கீழ்ப்பட்டோர்;
(2) 15 வயதிற்கும் 65 வயதிற்கும் இடைப்பட்டோர்
(3) 15 வயதிற்குக் கீழ்ப்பட்டோர் 65 வயதிற்கு மேற்பட்டோர்
(4) 65 வயதிற்கு மேற்பட்டோர்

29) கீழே காணப்படும் மனித உரிமைகளுள் அரசியல் உரிமையாக கருதப்படும் ஒன்று யாது?
(1) வாக்கைப் பிரயோகிக்கும் உரிமை (2) தொழில் செய்யும் உரிமை.
(3) தொழில்சங்கங்களில் சேர்ந்துசெயலாற்றும் உரிமை
(4) சமயாசார சின்னங்களை அணிவதற்கு இருக்கின்ற உரிமை

30) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுள் முதலாம் உலக மகாயுத்தத்துடன் தொடர்புள்ள வாக்கியங்கள் அடங்கியுள்ள விடை எது?
A: நாட்டுக்கூட்டவயம் (சர்வதேசசங்கம்) நிறுவப்பட்டமை
B: ஹீரோசிமா நகரத்திற்குக்குண்டு வீசப்பட்டமை
C. ஐக்கிய நாடுகள் அமையம் உருவாக்கப்பட்டமை
D. ''சொஜீவோ சம்பவம்'' நிகழ்ந்தமை
(1) AB (2) BC (3) AD (4) DC

31) பெருந்தோட்டப்பயிர்ச்செய் கையினால் ஏற்பட்ட பாதகமான நிகழ்வு யாது?
(1) பெருந்தெரு,புகையிரதப்பாதை விருத்தியடைந்தமை
(2) மலையகத்தில் காடழிப்பினால் மண்ணரிப்பு ஏற்பட வழிவகுத்தது
(3) துறைமுகம் வளர்ச்சியடைந்தமை
(4) பெருந்தோட்டத்துறை ஏற்றுமதி மூலம் அதிகளவு வருமானம் கிடைத்தது

32) கீழேதரப்பட்டுள்ள சம்பவங்களுள் பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புற்றவை சுட்டும் உள்ளடங்கிய விடை யாது?
A — பொஸ்ரன் தேயிலைக் கிளர்ச்சி
B — இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் ஆட்சி
C — பஸ்ரில் சிறச்சாலைதாக்கப்பட்டமை
D — லெனின் தலைமையிலான போராட்டம்
E — பதினான்காம் லூயிமன்னன் ஆட்சி
(1) AB (2) BC (3) CE (4) BD

33) பின்வரும் விதப்புரைகளுள் எவ் விதப்புரை டொனமூர் அரசியல் யாப்புச்சீர்திருத்தத்தில் இடம் பெற்றிராத அம்சம் எது?
(1) அரசுக்கழகம் நிறுவப்பட்டமை (2) சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை
(3) நிருவாகக் குழு ஏற்படுத்தப்பட்டமை
(4) பிரதம மந்திரி என்ற பதவி உருவாக்கப்பட்டமை

34) கல்வி அறிவு மிகக் குறைந்த மட்டத்திலுள்ள அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டிற்கு மிகப் பொருத்தமானதும் முக்கியமானதுமான தொடர்பாடல் சாதனம் எது?
(1) பத்திரிகைகள் (2) வானொலி (3) துண்டுப்பிரசுரங்கள் (4) சஞ்சிகைகள்

35) இலங்கைக்கு வருகை தந்த பத்தகச்சானாவும் குழுவினரும் பின்வரும் ஆறுகளில் எந்த ஆற்றின் கரையோரமாகத் தமது குடியிருப்பை அமைத்தார்கள்?
(1) மகாவலி (2) கதம்பநதி (3) களனிநதி (4) கல்யாணிநதி

★ தரப்பட்டுள்ள A,B,C,D,E,F ஆகிய சோடிப் பதங்கள் கட்டப்பட்டுள்ளன. அச்சோடியின் முதலாவது இரண்டாவதில் விளைவிக்கும் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு 36 முதல்40 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A 1. வெளி நாட்டு உயர்தரப் பொருள் இறக்குமதி
2. உள் நாட்டு பொருளின் சந்தை வாய்ப்பு

B 1. கிருமிநாசிகளின் உபயோகம்
2. உணவு பயிரிற்கான நோய்த்தாக்கம்

C 1. சனத்தொகை அதிகரிப்பு வீதம்
2. சனத்தொகை இரட்டிப்பதற்குச் செல்லும் காலம்

D 1. சுகாதார சேவைகளின் விரிவாக்கம்
2. சிசு மரணம்

E 1. காடாக்கம்
2. மழைவீழ்ச்சியின் அளவு

F 1. மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை
2. கல்வியறிவு

36) மேற்கூறிய சோடிகளில் முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பு இரண்டாவதிலெந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாத சோடி எது?
(1) C (2) D (3) E (4) F

(5ஆம் பக்கம் பார்க்க)

---

## செந்தமிழர் தேசம்

### தேசிகரை மறக்குமா ?..

எழுச்சியின் இறவு கோலே எண்ணத்தின்
நாற்றாங் காலே!
விழிப்புற்ற செந்தமிழர் தேசத்தின் விடி
வெள்ளித் தூதே!-நாங்கள்
தொழுகின்ற இறையே! வாழ்வின் தொகை
நூலே!-தமிழர்
அழுகையை அழித்த பாட்டே அகிலமா
மறக்கும் உம்மை.

- தேன் தமிழ் தந்த தேசிகர் நினைவில் -
மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்

---

# 116 பெண்கள் தேர்தலில் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் 116 பெண் வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

தேசியபட்டியலில் ஆறு பெண்களும் வேட்பாளர் பட்டியலில் 110 பெண்களும் போட்டியிடவுள்ளனர்.

தேசிய பட்டியலில் முன்னாள் தமிழரசுக்கட்சியின் தலைவரும்பட்டிருப்பு.எம் பியுமான எம்.இராஜமாணிக்கத்தின் இரண்டாவதுபுதல்வி றமணி இடம் பெற்றுள்ளார்.

(ந)

---

# சண்டிலிப்பாய் பிர. செயலர் பிரிவில் இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு

(மானிப்பாய்)

தற்போதைய யுத்த சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்களுக்கான, இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு நாளை 18-ம் திகதி திங்கட் கிழமையும், நாளை மறுதினம் 19-ம்திகதி செவ்வாய்க்கிழமையும், சங்கானை மக்கள் வங்கிக்கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை ஜே 129, 130, 131, 132, 133, 139, 140: 143 ஆகிய இராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும்,

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஜே 144, 146, 147, 148, 152, 153, 154, 155 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இக் கொடுப்பனவுகள வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளச் செல்பவர்கள்தத்தமதுபகுதிக்கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தமது கொடுப்பனவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(செ-120)

---

# தினக்குரல் படப்பிடிப்பாளர் பொலிஸாரால் கைது

[கொழும்பு]

கொழும்பில் நடை பெற்ற தமிழ் அரசியல் கட்சியின் கூட்டமொன்றை புகைப்பட மெடுக்கச் சென்ற கொழும்பு தினசரிப் பத்திரிகை ஒன்றைச் சேர்ந்த படப்பிடிப்பாளர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நடத்திய பத்திரிகையாளர் மகா நாட்டைப் புகைப்படம் எடுக்கச் சென்ற தினக்குரல் பத்திரிகையின் படப்பிடிப்பாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது புகைப் படச்சுருள் முடிவடைந்ததை அடுத்து அதனை வாங்குவதற்காக கூட்டம் நடைபெற்ற இடத்திலிருந்து வெளியே ஓடிச் சென்ற பொழுது அங்கிருந்தவர்கள் பொலிஸாரிடம் காட்டிக் கொடுத்தமையால் இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது:

இச்சம்பவத்தை அடுத்து கொழும்பு மாவட்ட எம். பி. ஆர். யோகராஜன் இவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

(வ)

---

## பொலிஸ் அதிகாரியின்

# இடமாற்றத்தை இரத்துச் செய்யக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

கடந்த நான்கு ஆண்டுகளாக பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றிய பெரும்பான்மை சமூகத்தைச்சேர்ந்த பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தினை இரத்துச் செய்யக்கோரிஅங்கு வசித்து வருகின்ற சுமார் இரண்டாயிரம் மக்கள் அவர் மாற்றலாகி செல்வதினை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய சம்பவம் அண்மையில் சிதம்பரபுரத்தில் நடைபெற்றுள்ளது.

குறிப்பிட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி மக்களுடன் மிகவும் விசுவாசமாக நடந்து கொள்வதினாலேயே அவரது மாற்றத்தை இரத்து செய்ய வேண்டும்அவரே தொடர்ந்தும் பொறுப்பதிகாரியாக இருக்கவேண்டும் என மக்கள் கோரிக்கைவிடுத் துள்ளனர்.

சிதம்பரபுரத்தில் 7240 மக்கள்வசித்து வருகின்றனர், இந்தியாவிலிருந்து நாடுதிரும்பியவர்களும் இதில் அடங்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கு வசித்து வருகின்ற மக்களுடைய சுக துக்கங்களில் இந்த பொலிஸ் அதிகாரி பேதமின்றி பங்கு கொள்வதினால் அவரதுமாற்றத்தினை இரத்து செய்ய வேண்டும் என மக்கள் வேண்டியுள்ளனர்.

(க)

இன்று ஒரு தகவல்

## தருணம் வரும்போது தக்கவற்றை அறியலாம்

ஒரு காட்டில் குளமொன்று இருந்தது:அத்தக் குளத்தின் நீர் மட்டம் எப்போதும் அமைதியாக இருப்பதில்லை; ஆடி அசைந்தபடி இருக்கும்.

இதற்குக் காரணம் என்ன தெரியுமா? இந்தக் குளத்தில் வாழும் மீன்களின் ஆர்ப்பாட்டம் தான். இந்த மீன்கள் எல்லாம் போடும்கும்மாளத்தால் முழுக்குளமும்;சல சலத்துக் கொண்டே இருக்கும்.

இந்தக்குளத்தில் ஒருபெரிய தவளையும் இருந்தது. ஒரே ஒரு தவளை இருப்பதால் மீன்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதனை எதிர்த்தன.

அது மட்டுமன்றி தவளையின் சொரசொரப்பான தோலையும் அதன் தோற்றத்தையும் பார்த்துக் கிண்டல் செய்தன.

ஆனால் தவளை எதுவும் பேசாமல் இருக்கும். தவளை பேசாமல் இருப்பதால் அவற்றின் கேலியும் கிண்டலும் அதிகரித்துக் கொண்டே சென்றன.

தமக்கு மினுமினுப்பான உடலும் அழகான கண்களும் உள்ளதாகவும். தவளைக்கு சொரு சொரப்பான தோலும் அசிங்கமான கண்களும் இருப்பதாகக் கேலி செய்தன.

தவளைக்கு ஆதரவாகப் பேச யாருமே இல்லாததால் அது எப்போதும் ஒதுங்கியே இருந்து வந்தது.

ஒருமுறை அந்தக் காட்டில் எப்போதும் இல்லாதவாறு வெப்பம் அதிகமானது, மழையும் பெய்யவில்லை.

சோலை வனமாகக் காட்சியளித்த காடு பாலைவனமாக மாறத்தொடங்கியது. தவளையும் மீன்களும் வசித்த குளமும் வற்றத் தொடங்கியது.

இதுவரை காலமும் கேலியும் கும்மாளமுமாக இருந்த மீன்களைக் கவலை ஆக்கிரமித்துக் கொண்டது. மீன்களின் நிலையைக் கண்டு தவளையும் கவலைப்பட்டது. ஆனால் தவளையால் மீன்களிற்கு உதவ முடியவில்லை.

வெப்பம் தாங்க முடியாத சில மீன்கள் செத்துப் போயின. உயிருடன் இருந்த மீன்களும் மிகவும் கஷ்டப்பட்டன. அவை தங்களுக்குள் ஈனக் குரலில் சொல்லி அழுதன.

சொர சொரப்பான அழகற்ற தோலாக இருந்தாலும் பரவாயில்லை தவளையாகப் பிறந்திருக்கலாம். நாம் மினுமினுப்பாக இருக்கிறது என்று சொன்ன எம் உடலால் வெப்பத்தைத் தாங்க முடியவில்லையே.

தவளை ஓர் ஓரத்தில் இருந்தபடி மழைவராதா மழைவந்து வெப்பத்தைப் போக்கி மீன்களின் உயிரைக் காப்பாற்றாதா? என்று ஏக்கத்துடன் வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.

பாப்பாமுரசு

# பலாலி பயிற்சிக் கலாசாலையின் பயிற்சி பெற்றவர்கள் கவனத்திற்கு

**பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி முடித்து இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக கொள்ளாதவர்கள் கலாசாலையின் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கு. சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார் அவர்களின் விபரம் வருமாறு (ஆ-ர்)**

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி முடித்துஇதுவரைசான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் கலாசாலையின் கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கு. சதாசிவமூர்த்தி கேட்டுள்ளார். அவர்களின்விபரம்பின் வருமாறு:

ஆர். பெனெடிக் பலாலி தெற்கு, வசாவிளான்
கே. ஜெயபாலன் வியாபாரி மூலை, பருத்தித்துறை
எஸ். இராமகிருஷ்ணன் வயலெல்லை, தும்பளை பருத்தித்துறை
கே. சிவராமலிங்கம் திணைகலட்டி, தும்பளை, பருத்தித்துறை
செல்வி. சி. தர்மதுரை 'லீலான்ஸ் லொட்ஸ்' முல்லானை, இளவாலை
செல்வி. எம். எஸ். ஜெறட்ணம் 'ரட்னஸ்தான்', பண்டத்தரிப்பு
செல்வி. என். சபாரத்தினம் 89, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
கே. நவரத்தினம் வல்வெட்டித்துறை
ரி. நமநாதன் சித்தன்கேணி
எம். கோகுலானந்தன் அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
பி. பத்மநாதன் கல்லூரி லேன், சித்தன்கேணி
ரி. எஸ். சரவணபவான் திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பாணம்
எஸ். ரி. தில்லைநடேசன் குரும்பசிட்டி, தெல்லிப்பளை
ரி, தவராசா டைமன்மகால், அல்வாய் தெற்கு, அல்வாய்
செல்வி. எஸ். அமிர்தலிங்கம் அளவெட்டி வடக்கு, அளவெட்டி
செல்வி. பி. சின்னத்தம்பி சந்தை கிழக்குலேன், மானிப்பாய்
செல்வி. எம். விசுவநாதன் பிள்ளையார் வீதி, அளவெட்டி
செல்வி. ரி. செல்லப்பா 'ஈஸ்வரி லொட்ஜ்', மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி
சகோதரி. எம். எஸ். யுல்முத. பெ. 65, 121 பிரதான வீதி யாழ்ப்பாணம்
திருமதி. ஏ. குழந்தைவேலு 'சாந்தம்', பவுண்டறி வீதி, வவுனியா
செல்வி. கே. முருகேசு அத்லு கோவில், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி
செல்வி. எஸ். பரஞ்சோதி தொண்டைமானாறு
செல்வி. கே. வேலுப்பிள்ளை 'மலர்மகள் மனை', வட்டுக்கோட்டை
திருமதி. சிவபாக்கியம் பாலசிங்கம் 'அன்னவில்லா', இருபாலை, கோப்பாய்
ஆர். நவரத்தினம் பாடசாலை அருகாமை, குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளை
எஸ். தங்கராசா குருக்கள் மடம், செட்டிப்பாளையம்
எஸ். விக்கினேஸ்வரன் உரும்பிராய் வடக்கு. உரும்பிராய்
செல்வி. எம். கணபதிநாதன் 27/1, சுவாட்ஸ்லேன், கண்டி வீதி, யாழ்.
கே. பொன்னுத்துரை மணவளை, சாவகச்சேரி
பி. செல்வரத்தினம் கைகாட்டி வழி, வீமன்காமம், தெல்லிப்பளை
ஏ. எஸ். சுந்தரலிங்கம் 'துரை மலர் பொய்கை,' இணுவில் மேற்கு, இணுவில்
வி. எஸ். கீதா பொங்கலன்ட் பெற்றோல் நிலைய வீதி, சுன்னாகம்
கே. எஸ். நடராசா ஊரெழு கிழக்கு, சுன்னாகம்
செல்வி. எம். அம்பலவாணர் தாளைகட்டி, வேலணை
செல்வி. எம். பசுபதி மாதனை, பருத்தித்துறை
செல்வி. ஆர். சின்னத்தம்பி 9, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
ஏ. டேவிற் டாக்டர், சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்
கணபதி கந்தசாமி துணுக்காய்
இராமலிங்கம் கனகரத்தினம் வட்டுக்கோட்டை
இராமலிங்கம் கைலைநாதன் எழுதுமட்டுவாள்
காரை மகேசசர்மா முரளிதரன் யாழ்ப்பாணம்
சபாபதிப்பிள்ளை சீனிவாசகம் ராஜேந்திரன் கரவெட்டி
ஆறுமுகம் இராசநாயகம் காரைநகர்
முருகேசு சிதம்பரநாதன் வட்டுக்கோட்டை
ஆறுமுகத்தான் தம்பையா கரவெட்டி
இராமசாமி தனராஜா யாழ்ப்பாணம்
இராயப்பு திருச்செல்வம் அல்வாய்
செல்லத்துரை விஸ்வநாதன் யாழ்ப்பாணம்
கோபால் வித்தியாசாகரம் பருத்தித்துறை
ஜஸ்மினெ ஜயந்தி அன்னப்பா மானிப்பாய்
மரிய அனர்ரீ மனோரதி ஜேக்கப் யாழ்ப்பாணம்
இரேசி பத்மினி ஜெயராசா யாழ்ப்பாணம்
புனிதவதி நல்லதம்பி கரவெட்டி
எலிசபத் மங்களநாயகி நவரட்ணராஜா கரவெட்டி
கிறிஸ்ரஸ் பாலேந்திரன் நவரட்ணராசா யாழ்ப்பாணம்
சரஸ்வதி பத்மநாதன் யாழ்ப்பாணம்
ஜயந்தி ரட்ணராஜனி இரத்தினசிங்கம் சுன்னாகம்
எலிசபெத் நேசராணிடோட்டிகஸ் யாழ்ப்பாணம்
சுசீலாதேவி விஸ்வலிங்கம் யாழ்ப்பாணம்
தர்மஜோதி சொலமன் உடுவில்
செல்லையா அமிர்தலிங்கம் சண்டிலிப்பாய்

(த-39)

யாழ். மாவட்ட

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலிற்குத் தட்டுப்பாடு

(தென்மராட்சி)

யாழ். மவாட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலிற்கு தட்டுப்பாடு நிலவுகிறதாம்.

எரிபொருள்முடிந்துவிட்டது என்ற வாசகங்களே மேற்படி நிலையங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளையில் தனியார் கடைகளில் ஒரு லீற்றர் பெற்றோல் 100 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-77)

மட்டக்களப்பில்

## கொத்தணி வாக்களிப்பு அமுல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாட்டத்தின் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் வசிக்கும் வாக்காளரின் நன்மை கருதி கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு தொகுதியில் செங்கலடி, வவுணதீவு மகாவித்தியாலயங்கள், பட்டிருப்பு தொகுதியில் பட்டிருப்பு செட்டிப்பாளய மகாவித்தியாலயம், கல்குடாத் தொகுதியில் மாங்கேணி மகாவித்தியாலயம், வாழைச் சேனை இந்துக்கல்லூரி, வந்தாறுமூலை ஸ்ரீமகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலேயே இக்கொத்தணிவாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளது.

இதே வேளை வாக்காளர் சுட்டெண் எதிர்வரும் 18ம் திகதி தபாலகத்தில் ஒப்படைக்கப்படும் எனவும், வாக்காளர் அட்டை விநியோகம் 21ம் திகதிக்கு முன்பு பூர்த்தியாகிவிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ-4)

# தொண்டர் ஆசிரியர் நியமனங்களில் முறைகேடு

## சங்கம் அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில், தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்கள்; முறைகேடான வகையில் வழங்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்டதின் தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக நியமனங்கள் வழங்கப்படவில்லை என்றும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளின் உறவினர்கள், கல்வித்தரம் குறைந்தவர்கள் மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி நிராகரிக்கப்பட்டவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்படுகிறதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏற்கனவே நியமனம் வழங்கப்படத் தெரிவு செய்யப்பட்டவர்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் ஆவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-4)

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர

37) மேற்க்கூறிய சோடிகளில் எச் சோடியில் முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பு இரண்டாவதில் அதிகரிப்பை ஏற்படுத்தும் என்பதை உணர்த்தும் சோடிகள் ஆகும்
(1) C (2) D (3) E (4) F

38) மேற்க்கூறிய சோடிகளில் எவ் சோடிகளில் முறையே முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் குறைவிற்கு காரணமாகின்றது?
(1) EF (2) CD (3) AE (4) BE

39) எச் சோடியில் முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பு இரண்டாவதில் அதிகரிப்பை ஏற்படுத்தி சூழல் மேன்மைக்கு வழி வகுக்கின்றது?
(1) E (2) F (3) D (4) C

40) மேற்கூறிய சோடிகளில் ஒரு சோடியின் முதலாவதில் ஏற்படும் அதிகரிப்பு இரண்டாவதில் வீழ்ச்சியினை ஏற்படுத்தி பெளதீக வாழ்க்கைத்தர உயர்வித்கு வழிவகுக்கும் சோடி எது?
(1) C (2) F (3) E (4) D

சுயேச்சைக்குழு இல-3
(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)
எண்ணம் கண்டோம் ஏற்றம் கண்டோம் துயர்தீரும்
வண்ணம் கொண்டோம் தொலைபேசிச் சின்னம் கண்டோம்

(இ-788)

## பொலிஸ் குழு மீது தீவிரவாதிகள் தாக்குதல்

(புதுடில்லி)

பொலிஸ் குழு மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 9 பொலிஸாரும் ஒரு சிறைக் கைதியும் கொல்லப்பட்டனர்.

அசாம் மாநிலத்தில் சார்பின மாவட்டத்தில் குசேப்பூரில் சிறைக் கைதிகளைஏற்றிக் கொண்டு சென்ற 4 பொலிஸ் வாகனத் தொடர் மீதே தீவிரவாதிகள் இத் தாக்குதலை மேற்கொண்டனர்.

60இற்கும் மேற்பட்ட தீவிரவாதக் கும்பல் மறைந்திருந்து இந்த வாகனத் தொடர்மீது சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் இத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி உட்பட 8 பொலிஸார் கொல்லப்பட்டனர் என்றும் ஒருசிறைக் கைதியும் இதில் பலியாகியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக ஸ்தலத்தில் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டதாகவும் தாக்குதலுக்குரியகாரணத்தைக் கண்டறிவதில் காவல் துறையினர் ஈடுபட்டுவருவதாகத் தெரிய வருகிறது. (து)

## தீவிரவாதி தோட்டராஜன் பாங்கொக்கில் சுட்டுக் கொலை

(பாங்கொக்)

தலைமறைவு தீவிரவாத இயக்கத்தலைவர் தோட்டராஜனும் அவருடைய உதவியாளரும் பாங்கொக்கில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மலேசியாவிலிருந்து தொழிற்படும் இத்தலை மறைவு இயக்கத்தலைவர் பாங்கொக் சென்றாரென்றும் அங்கு எதிர்ப்புக் தீவிரவாதஇயக்கத்துடன் மோதல் ஏற்பட்டதென்றும் அதில் தோட்டராஜனும் அவரது துணைவர் கோபித் வர்மாவும் சுட்டுக் கொல்லப்பட்டனரென்றும் மும்பையிலுள்ள காவல்துறையினர் தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

தோட்டராஜன் தீவிரவாதக் குழு மும்பையிலும் செயற்படுகிறதென்றும் அங்கு நடைபெற்ற கொள்ளை கொலைகளுக்கு இதுவே பொறுப்பென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## அண்ணாவின் நினைவையொட்டி 400 சிறைக் கைதிகள் விடுதலை

(சென்னை)

அறிஞர் அண்ணாவின் நினைவு தினத்தை ஒட்டி தமிழகச் சிறைகளில் இருந்து 400 பேர்வரையில் விடுதலை செய்யப்பட்டனர்.



அறிஞர் அண்ணாவின் சிலைக்கு தமிழக முதல்வர் மு. கருணாநிதி உட்பட பிரமுகர்கள் பலர் அஞ்சலி நிகழ்த்தினர்.

தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் பல நிகழ்வுகள் இடம் பெற்றன. (க-து)

### வெடிகுண்டுப் புரளியால்

## பாக். இராணுவ ஆட்சியாளர் பயணித்த விமானம் இறக்கப்பட்டது

(நியூயோர்க்)

வெடி குண்டுப் புரளியால் இராணுவ ஆட்சியாளர் பயணம் செய்த விமானம் அவசரம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இச்சம்பவம் நியூயோர்க் விமான நிலையத்தில நடந்தது.

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் புதன் அன்று பிரயாணம் மேற்கொண்ட பாகிஸ்தான் சர்வதேச விமானம் அவசர அவசரமாகத்தரையிறக்கப்பட்டது.

கே.எஸ்.கே.விமான நிலையத்தில் விமானம் புறப்படுவதற்கு முன் மோப்ப நாய்களால் மோப்பமிடப்பட்டு பூரணமாக சோதிக்கப்பட்டு விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானத்தில் 3 குண்டுகள்வைக்கப்பட்டிருப்பதாக தொலைபேசி செய்தி கிடைத்ததை அடுத்து விமானம்நியூயோர்க் விமானநிலையத்தில் இறக்கப்பட்டது.

மீண்டும் விமானம் பயணிகளின் பொதிகள் யாவும் பூரணமாகச் சோதிக்கப்பட்டு வியாழன் காலை புறப்பட்டது. (து)

## இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

(வாஷிங்டன்)

இந்தியாவும் அமெரிக்காவும் 5 பாரிய வர்த்தக ஒப்பந்தங்களில் நேற்றுக் கைச்சாத்திட்டன.

600 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள இந்த வர்த்தக ஒப்பந்தங்கள் மின்னியல்துறை கம்பியூட்டர் தொழில்துறை மற்றும் வங்கித் துறைத்திட்டத்திற்கெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் அமெரிக்கப் பொருட்களை வாங்குவதற்கான அமெரிக்க வங்கியில் 90 கோடி டொலர் கடன்களும் அடங்கும்.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய நிதி அமைச்சர் ஜஸ்வந்சிங்கும் அமெரிக்க வர்த்தக அமைச்சர்நோர்மன்வைஸ்ம் வாஷிங்டனில் கைச்சாத்திட்டார்கள். (து)

உலக தரிசனம்

### பாகிஸ்தானின் பொருளாதாரம்

## 10 வருடங்கள் பின்னடைவு ஆய்வறிக்கைகள் தரும் தகவல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் கடந்த 10 வருடங்களாக பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை அந்த நாட்டு வங்கி அறிக்கைகள் தெரிவித்துள்ளது.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பாகிஸ்தானின் 15 வயதிற்கு மேற்பட்டோரில் 55 வீதத்தினர் கல்வி அறிவு அற்றவர்களாகவும் 1000 குழந்தைகள் பிறந்தால் 99 குழந்தைகள் இறந்து விடுகிறார்களென்றும் அதே வேளை 10 ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் குறைவு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஏற்கனவே 3 கோடியே 10 இலட்சம் டொலர் கடனில் இருக்கிறதென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## அஸாம் தீவிர வாதிகள் 200 பேர் அரசிடம் சரணடைந்தனர்

(புதுடில்லி)

இந்தியாவின்.அஸாம் மாநிலத்தில் இயங்கிவரும் பிரிவினைவாதக் குழுவொன்றைச்சேர்ந்த 200 தீவிரவாதிகள் அரசிடம் சரணடைந்துள்ளனர்.

அஸாம் ஐக்கிய விடுதலை என்ற அமைப்பைச் சேர்ந்த அம் மாநிலத்தில்சுதந்திர தாயகம் அமைப்பதற்காக போரிட்டுவரும் அதி தீவிரவாதப் போக்குடையவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,மேற்படி அமைப்பின் தலைமைப்பீடத்திற்கும் சாதாரண போராளிகளுக்கும் இடையேயான கருத்து முரண்பாடுகளே இச் சரணடைவிற்கு வழி வகுத்திருப்பதாக கூறப்படுகிறது.

இதற்கு முன்பும் இவ் அமைப்பைச் சேர்ந்த பலர் சரணடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நேபாளத்தில் மோதல் பெண்போராளி உட்பட நால்வர் பலி பெருந்தொகை ஆயுதங்கள் மீட்பு

(காட்மண்டு)

நேபாளத்தில்,பொலிஸ் பிரிவினர்க்கும் மாவோ கிளர்ச்சிவாத குழுவினர்க்குமிடையே நடந்த மோதல் சம்பவத்தில் பெண் போராளி உட்பட நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

இம்மோதல் சம்பவத்தின் போது,நாட்டுத்துப்பாக்கிகள் 4,19 கைக்குண்டுகள், பெருந்தொகையான வெடிபொருட்கள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை,பயங்கரவாத நடவடிக்கைகளால் பாதிப்புற்ற கிராமங்களுக்கு சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நேபாள அரசு அறிவித்துள்ளது. (உ)

## சூட்டர் 7 ரக போர் விமானத்தின் முதல் சோதனை அடுத்த வருடம்

[இஸ்லாமபாத்]

சீனாவுடன் இணைந்து பாகிஸ்தான் தயாரிக்கும் சூட்டர் 7 ரக போர் விமானத்தின் முதல் சோதனைப் பறப்பு அடுத்த வருடம் நடத்தப்படும் என்று பாகிஸ்தான் அறிவித்தது.

பாகிஸ்தான் விமானப் படையின் தளபதி ஏயர் மார்சல் சர்வேஷ் மேதி குரேசி இஸ்லாமபாத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிடுகையில் மேற்குலக நாடுகள் வழங்கும் உதவிகள் கிடைப்பதில் தாமதமாவதால் குறிப்பிட்ட காலத்தில் விமான தயாரிப்பை முடிக்க முடியாமல் உள்ளதாகவும் இருந்தும் குறித்த காலத்தில் முடிப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் தெரிவித்தார். [து]

## விண்ணப்பமுடிவு நீடிப்பு

(இணுவில்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்க, இளம் சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகளுக்கான விண்ணப்ப முடிவு இம்மாதம் 25 ஆம் திகதி என தெரிவிக்கப்படுகின்றது. (செ-49)

## விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் கன்னட நடிகர் கடத்தப்பட்டார்

### சுப்பிரமணிய சுவாமி தெரிவிப்பு

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமார் கடத்தல், விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் நடத்தப்பட்ட ஓர் நாடகம் என ஜனதாக்கட்சி தலைவர் டாக்டர். சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

நடிகர் ராஜ்குமார் மற்றும் மூவர் விடுதலை தொடர்பாக தாமதிக்காது உடன்நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அவர்களுடைய பாதுகாப்பினை உறுதிசெய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராணுவ மற்றும் உதவிகளை கர்நாடக அரசுக்கு வழங்கி அதிரடி நடவடிக்கை மூலம் நடிகர் ராஜ்குமாரை மீட்டெடுக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக வெளியான செய்திகளை மத்திய நிதித்துறை இணை அமைச்சர் தனஞ்ஜெயகுமார், முற்றாகவே மறுத்துள்ளார் (உ)

## இலவச மருத்துவ முகாம்

(இணுவில்)

புன்னாலைக் கட்டுவன் கணேச சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (செ 49)

## பொதுக்கூட்டம்

(அரியாலை)

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டமும், உத்தியோகத்தர்கள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு மேற்படி கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (செ-196)

## ஜகார்த்தா குண்டு வெடிப்பில் சுஹார்ட்டோவின் மகன் கைது

(ஜகார்த்தா)

இந்தோனேசிய முன்னாள் அதிபர் சுஹார்ட்டோவின் இளைய மகன் ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்டார்.

அதிபர் அப்துல் றகுமான் வாகிட்டின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள டோமி சுஹார்ட்டோ அண்மையில் நடந்த பாரிய குண்டுவெடிப்புத் தாக்குதலுக்கு சூத்திரதாரியெனக் கருதப்படுகிறது.

பங்குச்சந்தைக்குப் பக்கத்தில் நடைபெற்ற இந்த குண்டு வெடிப்பின் போது 15 பேர் பலியானதும் பலர்காயமடைந்ததும் தெரிந்ததே.

காவலிலிருக்கும் டோமி சுஹார்ட்டோ விசாரிக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

இடும்பைக்கு இடும்பை
படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படா அதவர்

- குறள் -

# வலம்புரி

## அவலப் பயணங்கள்

தொடர் கதையான அவலப் பயணங்கள் உள்ளத்தைச் சுடுகின்றன தன்னை இழந்தும் தக்கதொரு முடிவு கட்டுவோமென்பவரைத் தக்கை வைத்துத் தடுக்கிறது சுயநலக்கும்பல். எது நல்லாய் நடக்கும் இந்த மண்ணில் என்ற ஏக்கப் பெருமூச்சு ஒன்றே மிச்ச மாச்சு.

சீவிய காலச் சொத்துக்களை ஒரு சில நொடிப் பொழுதில் அகற்ற முடியாது. அகற்றினாலும் ஒட்டகம் இடம் பிடிப்பது போல் எங்கே வைத்துத் தொலைப்பது என்று சிந்தை நோகும் மக்கள் கூட்டம் பார்க்கப் பரிதாபம் தான். அவலப்பயணம் தொடர்கதையாகக் கூடாது. இதற்கு ஒரு முடிவு வேண்டும். அதுவும் உடனே வேண்டும். அவை கைவரப் பெற்றால் இந்த மண்ணுக்கு விடிவு என்று பொருள் கொள்ளலாம்.

தேர்தல் களம் பல கண்டு, ஆசை வார்த்தைகள் பல கேட்டு, ஏமாந்து போய் மறு முறை வரட்டும் என்று வீறாப்பு எத்தனை தடவைகள் பேசுவது. அந்தப் பலவீனமே எம்மை அடிமைப்படுத்தி விட்டது. நாங்கள் ஆசைப் படுவது கை கூடுகின்றதில்லையே.

இரண்டு தமிழன் ஒரிடத்தில் ஒற்றுமையாக இருக்க மாட்டான் என்பது நகைச் சுவையல்ல - நயச் சுவை தான். இம் முறை ஒன்று செய்வோமா? அறிந்தவன் அயலவன் உறவினன் என்ற தொடர்புகளை உதறித் தள்ளி, பதவி, பணம் என்ற சலுகைகளை தேர்தல் காலத்தில் உடைத்தெறிவோம். தமிழர்கள் ஒரு போதும் ஒன்று சேரமாட்டார்கள் என்ற சுலோகத்தைத் தகர்த்தெறிந்தால் அவலப் பயணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் காலம் தாழ்த்தாது செய்ய வேண்டியதைச் செய்யாது, செந்தமிழர் கூட்டமென்று உதட்டளவில் உச்சரித்தால் ஊழிக் காலம் வந்து நெருங்கும். உயர்வும் உன்னத வாழ்வும் இம்மியும்கிடையாது.

தனிப்பட்ட சிறு குரோதங்களை மறந்து பொது நலனுக்காக ஒன்றுபடுதலே மக்களுக்காகச் செய்யும் தொண்டு என வேதனைச் சுமையோடு பேசுவது கேட்கிறது. பேசிக்களைத்தவன் தமிழன். செயலில் காட்ட வேண்டிய காலமிது.

அவலப்பயணங்கள் அங்கும் இங்குமாக ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி போல் முடிவில்லாமல் தொடரக் கூடாது. மெய்ஞ்ஞான

வெள்ளம் தொடர்ந்தால் ஆத்ம ஆறுதல் கிடைக்கும். எங்களை வாழ விடுங்கள். சுதந்திரமாக - சொந்த மண்ணில் சுகம் காண - அவலப்பயணங்கள் அற்றுப் போவது எப்போ?

அன்புடன் ஆசிரியர்

# கர்ப்பவதியின் வழிபாடுகளிற்கு அமையவே குழந்தையின் எதிர்காலம் அமைகிறது

இம்மாதம் 10ஆம் திகதி ஞாயிறு அன்று பிரசுரிக்கப்பட்ட சோதிட பலனின் தொடர்ச்சிகீழே தரப்பட்டுள்ளது.

மூல நட்சத்திரம்

பெண் ஜெனனம் மகம், விசாகம், கேட்டை, மூலம் ஆகிய நான்கில் எதில் ஏற்பட்டாலும், அது முறையே, மாமனாரும், இளைய மைத்துனருக்கும், மூத்த மைத்துனருககும், மாமனார் மாமியாருக்கும் ஆகாது என்று சொல்லப்படுகிறது. இதற்கு மற்றொரு மூலகாரணம் இந் நான்கு நட்சத்திரங்களில் பிறக்கும் பெண்களுக்கு ராட்சஸகணம் ஏற்படுகிறது. ஆகவே ராட்சஸகணம் அல்லாத வரனை மணப்பதன் மூலம், மேற்கண்ட பாதிப்புக்களைக் குறைக்க முடியும்.

இந்த தோஷம், ஆண் ஜெனனத்திற்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. வளர்பிறை மூலத்தில் பிறந்தாலும், மூல நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தாலும், தோஷம் இல்லை என்று சாஸ்திரம் சொல்லுகிறது.

மூலம் 1-ல் ஜெனனம் பிதாவுக்கு அதிர்ஷ்டம்

மூலம் 2-ல் ஜெனனம் மாதாவுக்கு

மூலம் 3-ல் ஜெனனம் தனநாசம்

மூலம் 4-ல் ஜெனனம் சுபம், தோஷமில்லை. இது பொது விதி.

★ வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி மாத மூலம் ''ஸ்வர்க்க மூலம்'' எனப்படும். இது ராஜ்ய சம்பத்து தரும்.

★ ஆனி, புரட்டாதி, ஐப்பசி, பங்குனி மாத மூலம் ''பாதாளமூலம்'' எனப்படும். இது தனநாசம் தரும்.

★ சித்திரை, ஆடி, மார்கழி, தை, மாத மூலம் ''மத்திய மூலம்'' எனப்படும். இது சர்வநாசம் தரும்.

இப்படிப்பட்ட மூல நட்சத்திரங்களில் வளர்பிறை மூலம் (சுக்கிலபட்ச மூலம்) சுபம். தேய்பிறை மூலம் (கிருஷ்ண பட்ச மூலம்) அசுபம். தோஷம் தரும்.

ஆயில்ய நட்சத்திரத்தை ''ஆஸ்லேஷா நட்சத்திரம்'' என்றும், கேட்டை நட்சத்திரத்தை ஜேஷ்டா நட்சத்திரம் என்றும் சொல்லி, இப்படிப்பட்ட நட்சத்திரங்களில் பிறக்கும் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள சில பிள்ளைகள் தயக்கம் அடைவார்கள்.

## சோதிட பலன்

விசாக நட்சத்திரம்

விசாக நட்சத்திரத்தில்பிறக்கும் பெண் ஜெனனத்தை ''விசாக பிறப்பு வீட்டிற்கு ஆகாது'' என்று சொல்லி அப்படிப்பட்ட பெண்களுக்கு விரைவில் திருமணம்முடித்து, புக்ககத்திற்கு அனுப்புவதைத் தமது முக்கிய பணியாகக் கொள்வார்கள். இவைகள் எல்லாம், பெண் ஜெனனத்திற்குப் பிரச்சினை தரும் என்று சொல்லப்படுகிறது.

ஜெனன லக்கினத்திற்கு 4ம் இல்லத்தில் அதிபதி கிரகம் மாதுஸ் தனாதிபதி எனப்படும்; 9ஆம்இல்லத்து அதிபதி கிரகம் பிதுர்ஸ் தனாதிபதி எனப்படும் இந்த இரு கிரகங்களும், பிறக்கும் ஒரு குழந்தையின் ஜெனன ஜாதகத்தில் பரிவர்த்தனையாகி இருந்தால் அது அக்குழந்தையின் அன்னைக்கு கண்டம் காட்டக் கூடியதாக இருக்கும். குழந்தை பிறந்த ஓராண்டில் இப்படிப்பட்ட பாதகம் ஏற்படலாம்' ஜெனன லக்கினத்திற்கு 4இல் கேது இருந்தால் அக்குழந்தையின் எட்டாவது வயதில் அன்னைக்கு கண்டம் அல்லது துர்மரணம்காட்டும்.

சனிக்கு முன்னும் பின்னும் சந்திரன் இருககப் பிறந்த குழந்தைகளின் அன்னைக்குத் தீராத பிணியைக் காட்டும். நான்கில் ராகு இருந்தால் அக் குழந்தையின் அன்னை ஈனம் அல்லது ஊனம் உடையவராக இருப்பார், என்று சொல்லப்படுகிறது. பகலில் பிறக்கும் குழந்தைக்குச் சுக்கிரனைக் கொண்டும் இரவில் பிறக்கும் குழந்தைக்குச் சந்திரனைக் கொண்டும் அக்குழந்தையின் அன்னைக்கு ஆயுள் ஆரோக்கியம் பற்றி எடுத்துச்சொல்ல வேண்டும். சனி 4ல் இருந்தால் மாற்றாந் தாய் உண்டாகும்: அல்லது ஜாதகருக்கு இருதார வாய்ப்புகள் ஏற்படும்.

கருத்து வேற்றுமை

ஜெனன லக்கினத்திற்கு 6-9ம் இல்லங்களில் மட்டும் பிதுர்க்காரகனான சூரியன் சனியுடன் கூடி இருப்பது நல்லது; மற்ற இடங்களில், இவ்விரு கிரகங்களின் சேர்க்கையும் பரஸ்பர சப்தம பார்வையும் இடம் பெற்று இருக்கக்கூடாது. இது தந்தை தனயனின் பிரிவினையை அல்லது கருத்து வேற்றுமையை காட்டும்.

உச்ச சனியும்-உச்ச சூரியனும் பரஸ்பர பார்வை பெறுவது கூடாது. சூரியனுடன் புதன் அல்லது சுக்கிரனோ அல்லது சனியுடன் குருவோ கூடியிருப்பது நல்லது. ஜெனன லக்கினத்திற்கு 9ஆல் சூரியன் இருப்பது சரியல்ல. ஜாதகரின் 12 வயதுடன் தந்தையின் யோகம் காலாவதியாகிவிடும். ஜெனன லக்கினத்திற்கு 11ல் சூரியன் இருப்பதும் கூடாது. அக் குழந்தை வளர வளர, அவருடைய தந்தைக்கு யோகம் படிப்படியாகக் குறைய ஆரம்பித்து விடும். சனிக்கு முன்னும் பின்னும் சூரியன் இருப்பது தந்தையின் ஆரோககியத்திற்குச் சரியல்ல. 8இல் ராகு இருப்பது ராகு திசையில் அந்த எட்டாமதிபதி புத்தியில் தந்தைக்குச் சிலுவு அல்லது கண்டம் காட்டும்.

ஏ எம் பிள்ளை

ஒரு குழந்தைக்குச் சூரிய திசை நடைபெறும் காலத்தில், ஆறுவருஷம் முழுதும் அல்லது ஒருபாதி 3 வருஷம் வரையிலாவது, அக்குழந்தையின் தந்தைக்குக் குடும்பப் பிரிவு, தொழில், வியாபாரம், உத்தியோகத்தில் பிரச்சினையும், உடல் நலத்தில் கோளாறும் போன்ற வகைகளில் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு பிரச்சினைகளைக் காட்டும்.

ஒரு குழந்தையின் ஜெனன ஜாதகத்தில் ஜெனன லக்கினத்திற்கு முன்னும் பின்னும் அல்லது சூரியன் நின்ற ஸ்தானத்திற்கு முன்னும் பின்னும் பகை அல்லது நீச்ச கிரகம் இருந்தால், அது அக்குழந்தையின் தந்தையின் ஆயுளைக் குறுக்கும். இப்படிப்பட்ட குழந்தைகள் கர்ப்பத்தில் இருக்கும் பொழுதே அதனுடைய தந்தையை மாரகம் செய்துவிடுகிறது.

(இ)

பரமபிதா காட்டியபாதை



# விசுவாசத்தை வார்த்தையில் காட்டாது செயலில் காட்டுங்கள்

''அடிப்போரிற்கு என் முதுகையும், தாடியைப்
பிடுங்குவோர்க்கு
என்தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தை செய்வோர்க்கும் காறி உமிழ்வோரிற்கும் என் முகத்தை மறைக்கவில்லை ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கிறார்''

செயலுடன் கூடிய விசுவாசமே (நம்பிக்கை) மனிதனை நற்கதிக்கு இட்டுச் செல்லும் என்பது இறைமகன் கிறிஸ்து எமக்குக் கற்றுத்தந்த பாடமாகும். இன்று எம்நாட்டிலே எத்திசையை நோக்கினும் போர் முழக்கமும், அழுகுரல்களும் ஆக்கிரமிப்புகளும் கொலையும் கொள்ளையும் அனாகரீகச் செயல்களும், பாலியல் வல்லுறவுகளும், சிறுவர் துஷ்பிரயோகங்களும், இடப்பெயர்வுகளும், பசியும் பட்டினியுமே, காணக்கிடக்கின்றது. நாம் எண்ணுவது ஒன்று ஆனால் நடப்பதோ வேறொன்று. எதை நாம் எண்ணகிறோமோ அதற்கு எதிர்மாறான செயல்களே நடைபெறுகின்றன.

இந்த வேளைகளிலெல்லாம் நாம் வேதனைகளைக் கண்டு விரக்தியடைகின்றோம் சோதனைகளைக் கண்டு துவண்டு விடுகின்றோம் இறைவனை நொந்து கொள்ளுகின்றோம். சகோதரர்களில் எரிந்து விழுகின்றோம். எதிர்ப்புக்களையும் தோல்விகளையும் எதிர்கொள்ள முடியாமல்சோர்ந்து விடுகின்றோம். இவையனைத்திற்கும் காரணம் என்ன என்பதைச் சிந்திப்பதில்லை சற்று ஆழ்ந்து சிந்தித்தால் காரணம் புரியும்:

எமது வாழ்க்கை பற்றி நாமாக திட்டங்களைத் தீட்டுகின்றோமே ஒழிய இறைசித்தம் ஒன்று உண்டு என்பதைப் பற்றிச் பலர் சிந்திப்பதில்லை. முன் நாம் விசுவாசிகளாய் இருக்கிறோம் என அறிக்கையிடுகின்றோமேயன்றி அந்த விசுவாசத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதில்லை. அன்று இஸ்ராயேல் மக்கள் மத்தியில் செயலற்ற விசுவாசம் காணப்பட்ட வேளை இதே துன்பங்களை அவர்கள் அனுபவித்தனர். அவர்களின்விசுவாசத்தை செயலுடன் கூடியதாக்கவும் உறுதிப்படுத்தவும் இறைவாக்கினர் எசாய விளைவதை நாம் எசாய 50:6-7 ல் காண முடியும்.

மேலும் யாக்கோப்பு எழுதிய திருமுகத்தின் 2-ம் அதிகாரத்தில் தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச்சொல்பவன் அதனைச் செயலில் காட்ட வேண்டும். அப்படிக் காட்டாவிடின் அந்த நம்பிக்கையால் என்னபயன்? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும்

ஜே. கே. பயஸ்
பலாலி. ஆசிரிய கலாசாலை

அன்றாட உணவும் இல்லா திருக்கும் போது அவரிற்கு எவ்வித உதவியும் செய்யாது நலமே. சென்றுவாருங்கள் குளிர் காய்ந்து கொள்ளுங்கள் என்று வெறும் வார்த்தைகளைக் கூறுவதனால் என்ன பயன் என்கிறார். இன்று எம் மத்தியிலும்யாகப்பரின்காலத்தில் வாழ்ந்ததுபோன்ற அவர் கூறுவது போன்ற ஏழைகளும், அனாதைகளும், அகதிகளும், கதியற்றோரும், கைம்பெண்களும் வாழ்கின்றனர். அவர்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்யாது அவர்களைப்பற்றி விமர்சனம் செய்வதால், அல்லது நலமாய் இருக்கிறீர்களா எனக்கேட்பதால் என்ன பயன்? இதுதான் எமது செயலுடன் கூடிய விசுவாசமா?

இயேசு தம்சீடரிடம் மக்கள் நாம் யாரென்று சொல்லுகிறார்கள் எனக் கேட்டபோது திருமுழுக்கு யோவான் எனவும், எலியா எனவும், இறைவாக்கினருள் ஒருவர் எனவும் பல்வேறு விதமாக சொல்கின்றனர் என்றனர். ஆனால் நீங்கள் நான்யாரென்று சொல்லுகிறீர்கள் எனச் சீடரிடம் கேட்டபோது பேதுரு நீர்மெசியா எனதனது விசுவாசத்தை அறிக்கையிட்டார். ஆனால் அதே பேதுருவின் விசுவாசத்தை யேசு கண்டிக்கிறார். 'சாத்தானே என் கண்முன் நில்லாதே' என விரட்டுகிறார். காரணம் அப்போது பேதுருவிடம் காணப்பட்ட விசுவாசம் செயலற்றதாய் இருந்தது. யேசு துன்பப்பட்டு கொலை செய்யப்பட்டு உயிர்த்தெழ வேண்டும் என்பதை பேதுருவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நாம் வாழும் இக்காலத்திலும் இறைவன் எம் ஒவ்வொருவரிடமும் செயலுடன் கூடிய விசுவாசத்தையே விரும்புகிறார். செயலற்ற விசுவாசம் வீணானது பயனற்றது; ஆகவே எமது துன்ப துயர வேளைகளில் விசுவாசத்தில் தளர்ந்து விடாமலும், உதவி தேவைப்படுவோர் மத்தியில் தாராள உள்ளம் கொண்ட செயல் புரிபவர்களாகவும் வாழ்ந்து கிறீஸ்தவ விசுவாசத்திற்கு செயல்வடிவம் கொடுப்போமாக.

# யாழ்-மத்தியூஸ் வீதியில் நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன

## பல்கலைக்கழக மாணவி காயம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியை அண்டிய பகுதியில் நேற்றுக் காலை அடுத்தடுத்து வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மாணவி எஸ். சர்மிலி (வயது 24) காயமடைந்தார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதுடன் யாழ். பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் பாடசாலை ஆகியவற்றிலிருந்து மாணவர்கள் உடனடியாக வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(சு-59-110-12)

# கப்பல் பயணச் சீட்டு நாளை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து திருமலை நோக்கி புறப்படவுள்ள ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பலுக்கான பயணச் சீட்டு நாளை திங்கட்கிழமை யாழ். சிவில் நிர்வாக கார்யலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக்கப்பலில் பயணம் செய்வதற்கான பயண அனுமதி பெற்றவர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் பயண ஆவத்தங்களுடன் யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு சிவில்நிர்வாக காரியாலயம் மேலும் அறிவித்துள்ளது. (ந-4)

### அரசியலில்:-

செல்லப்போவதாகவும் தெரிவித்திருந்தார். அவரது இழப்பு முஸ்லிம் மக்களுக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் பேரிழப்பாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (வ)

### முஸ்லிம்...

அஷ்ரப், இவரது இழப்பு முஸ்லிம் சமுதாயத்திற்கு பேரிழப்பாகும் இவ்வாறு வடமாகாண சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் சேகுகனி ஆரிப் தெரிவித்துள்ள இதேவேளை அமைச்சரின் அகால மரணம் குறித்து வவுனியாவில் உள்ள சகல முஸ்லிம் வர்த்தக நிலையங்களிலும் வெள்ளைக் கொடி பறக்க விடப்பட்டதுடன் நண்பகலுக்கு பின் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டன. (வ)

### ஜனாதிபதி...

டார்.

அமைச்சர் அஷ்ரப்பின் மறைவு குறித்து, அமைச்சர்கள் மங்கள சமரவீர, அலவி மௌலான, ஹேமா இரத்திநாயக்கா ஆகியோரும் தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர். (வ)

### இனந்தெரியாதோ...

வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ என்னும் இடத்தில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட்

### மட்டக்களப்பில்...

மாவடி ஆகிய இடங்களில் துக்கம் அனுஷ்டித்து கடைகள் மூடப்பட்டிருந்தன.

காத்தான்குடி உட்பட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முக்கிய பிரதேசங்கள் எங்கும் ஒரே சோகமயமாகக் காட்சி அளித்தன. தேசிய ஐக்கிய முன்னணியின் தேர்தல் நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (வ-60)

### அஷ்ரப்பின்...

கல்லூரியில் சேர்ந்த அஷ்ரப் 1975ம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் சட்டத்தரணியாக இணைந்து கொண்டார்.

★ 1977ம் ஆண்டு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியைத் தோற்றுவித்த இவர் 1981-ல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார்.

★ 1989ம் ஆண்டு முதன் முதல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

★ 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட இவர் துறைமுக கப்பல்துறை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சராக நியமனம் பெற்றார்.

★ 2000 ஆண்டு ஜூன் மாதம் தேசிய ஐக்கிய முன்னணியை ஆரம்பித்தார்.

# புளொட் உறுப்பினர் கைது

(வவுனியா)

வவுனியா யாழ் வீதி பொலிஸ் தடை முகாமில் வெடிகுண்டுடன் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த புளொட் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப் பட்டு வவுனியா பொலிசில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற இச்சம்பவத்தில் சத்தியா என்ற இயக்க பெயருடைய புளொட் உறுப்பினரே கைது செய்யப்பட்டவராவார். (வ)

# வேலணையில் சுற்றிவளைப்பு

வேலணை, துறையூர் பகுதி நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை இராணுவத்தினரும், கடற்படையினரும் கூட்டாக இணைந்து பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றை நடத்தியுள்ளதாக தெரியவருகிறது.

தேர்தல் பிரச்சார நடவடிக்கை தொடர்பாக கட்சி உறுப்பினர்கள் இப்பகுதிக்கு சென்று வருவதால் அவர்களைப் பாதுகாக்கும் நோக்குடனேயே இச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாக மேலும் தெரியவருகிறது. (ந-4)

### முகமாலை...

சாவகச்சேரி நோக்கியும் படைநகர்வுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. படையினரின் முன்னேற்ற முயற்சிகளை முறியடிக்க விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ

### வான்பரப்பில்-..,

குமாரபுர உடகந்த என்னும் இடத்தில் ஹெலியின் சிதைவுகளையும், கருகிய நிலையில் 13 சடலங்களைப் பொலிசார் மீட்டனர்.

இச் சம்பவம் நடைபெற்றவுடன் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி மீட்புப்பணிக்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஹெலி விபத்தில் கொல்லப் பட்டவர்களின் சடலங்கள் கருகிய நிலையில் மீட்கப்பட்டது. (வ-க)

### முஸ்லிம் சமூகத்தை...

அகால மரணச் செய்தி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு பிரதி அமைச்சரும் தேசிய ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உப தலைவருமான எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லா அமைச்சர் அஷ்ரப்பின் மரணச் செய்தி குறித்து விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## 27ஆவது ஒலிம்பிக் போட்டி

# முதலாவது தங்கப்பதக்கத்தை அமெரிக்கா வென்றது

அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 27 ஆவது கோடைகால ஒலிம்பிக்போட்டியின் இரண்டாவது நாளான நேற்று முதலாவது தங்கப் பதக்கத்தை அமெரிக்கா தட்டிச் சென்றது.

அமெரிக்கவீரரான 'மாங்ஷி ஜாங்ஷன்' என்பவரே முதலாவது தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்றவரானார்.

இது வரை நடைபெற்று முடிந்த போட்டிகளில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தலா இவ்விரண்டு தங்கப் பதக்கங்களையும் சுவிஸ்லாந்து, உக்ரேன், ரஷ்யா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் தலா ஒவ்வொரு தங்கப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

# இன ஒற்றுமையின் விடிவெள்ளி ஈ.பி.ஆர்.எல்.எவ் அனுதாபம்

அமைச்சர் அஷ்ரப் நாட்டின் இன மத பேதங்களைக் களைந்து சகல சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் தமிழ்த்தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்ட இவர், தந்தை செல்வாவின் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார்.

அன்னாரின் மறைவு ஈடு செய்யமுடியாத இழப்பு என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் சார்பில் த சுபத்திரன் விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார். (ந-4)

# பிக்குகளின் கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் நிராகரித்தார்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதற்கு தம்மை அனுமதிக்க வேண்டுமென பௌத்த பிக்குகள் விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் நிராகரித்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனந்த தேரர் தலைமையிலான பிக்குமார் குழுவினரே இவ்வேண்டுகோளை விடுத்திருந்தனர் என்றும் அவ்வேண்டுகோளே நிராகரிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ந)

# அஷ்ரப்பின் பூதவுடல் அடக்கம்செய்யப்பட்டது

(கொழும்பு)

அமைச்சர் அஷ்ரப்பின் பூதவுடலுக்கு பெருந்திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

கொழும்பு 7இல் உள்ள அவரது உத்தியோக பூர்வ வாசஸ் தலத்திலிருந்து பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு யாவத்தை மீராஜும்மா பள்ளி மையவாடியில் இஸ்லாமிய முறைப்படி நள்ளிரவு 12.15 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அரச மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்ட முதலாவது முஸ்லிம் தலைவர் அஷ்ரப் என்பதும் இங்குறிப்பிடத்தக்கது. (வ)

### முஸ்லிம்களின்...

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. வினாயகமூர்த்தி விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

முஸ்லிம் மக்களினது உரி

# 80 தமிழர் கைது

நேற்று முன்தினமிரவு கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக சுமார் 80 தமிழர் வரை கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிசார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

துள்ளனர். (வ)

## இனந்தெரியாதோ...

வைத்தியசாலையில் அனும திக்கப் பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் குருநா கல் மாவட்டத்தில் கல்சமுவ என்னும் இடத்தில் இடம் பெற்ற ஐக்கிய தேசியக் கட் சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு திரும்பியபோதே வாரியப்பொல என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியினர் சென்ற வாகனங்கள் சேத மாக்கப்பட்டதாகவும் தெரி விக்கப்பட்டது. (வ)

ஐக்கிய முன்னணியில் போட்டியிட்ட இவர் துறைமுக கப்பல்துறை புனர்வாழ்வு புனர மைப்பு அமைச்சராக நிய மனம் பெற்றார்.

- ★ 2000 ஆண்டு ஜுன் மாதம் தேசிய ஐக்கிய முன்னணியை ஆரம்பித் தார்.
- ★ அரசியல் அமைப்பு சீர் திருத்த வரைவுகளில் அஷ்ரப் முக்கிய பங்கு வகித்திருந்தார்.
- ★ புதிய அரசியல் அமைப் புச் சீர்திருத்த சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது அங்கு உரையாற் றிய முதலாவது பாரா ளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தார். (வ)

அகால மரணச் செய்தி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு பிரதி அமைச்ச ரும் தேசிய ஐக்கிய முன்ன ணியின் சிரேஷ்ட உப தலைவருமான எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லா அமைச்சர் அஷ்ரப்பின் மரணச் செய்தி குறித்து விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதா வது:

எரிகின்ற இனப்பிரச்சினைக் குத் தீர்வு காணவேண்டும் என்று உறுதியாகச் செயல் பட்ட அமைச்சர் அஷ்ரப் முழு முஸ்லிம் சமூகத்தையும் ஒற்றுமைப்படுத்தி சரித்திரம் படைத்தார் என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது. (வ-60)

## முஸ்லிம்களின்...

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி விடுத்த அனுதாபச் செய்தியில் தெரி வித்துள்ளார்.

அந்த அனுதாபச் செய்தி யில் மேலும் தெரிவித்திருப் பதாவது,

முஸ்லிம் மக்களினது உரி மைகளைப் பிறகட்சிகளுடன் இணைந்து பெற்றுக்கொள்ள முடியாது என்றுணர்ந்து தனிக்கட்சி அமைத்து அதன் மூலம் வெற்றிகண்டவர் அஷ் ரப்.

தமிழில் பாண்டியத்தியம் பெற்ற அவரின் மறைவு முஸ் லிம் மக்களுக்கு பேரிழப்பா கும் என்று தெரிவித்துள் ளார். (வ)

தொடர்பாக சுமார் 80 தமி ழர் வரை கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர்.

இக் குண்டு வெடிப்புச் சம் பவம் தொடர்பாககொழும்பு குற்றத்தடுப்புப் பொலிசார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## பௌசி...

மான அமைச்சர் அஷ்ரப் தனது மரணத்திற்கு முன் னர் கூறியிருந்தார்.

புதிய நாடாளுமன்றத்தில் பௌசி அமைச்சராக இருந் தால் தான் எதிர்க்கட்சி ஆச னத்தில் அமர்ந்திருந்து ஜனா திபதிக்கு ஆதரவு வழங்கு வேன் என்றும் அஷ்ரப் மேலும் கூறியிருந்தார். (ந)


வினையே உங்கள் இன்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு-கிழக்கு மாகாணங்கள்
எக்காலத்திலும் பிரிக்கப்படாத பிராந்தியத்தில்
எமக்கென விசேட அதிகாரங்களைக் கொண்ட
சுயாட்சியைக் கொண்ட ஒரு நிர்வாக அலகைப்
பெற்றுக் கொள்ள...
ஈ. பி. டி. பி.யைப்பலப்படுத்துவீர்



(ஈ. பி. டி. பி)

(இ/739)

இன்று வரை ஈ. பி. டி. பி. யின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் 400க்கும் மேற்பட்டோர் வரை வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்



இப்பத்திரிகை ''வலம்புரி'' ஆன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வென்லாதெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.